# சமரச உத்தரவைப் பெற்றுள்ளீர்களா?

## நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டிய விஷயங்கள் இதோ இங்கே.




Ministry of Culture, Community and Youth

Ministry of Law Singapore

MND Singapore

## சமரச உத்தரவு என்றால் என்ன?

சமரச உத்தரவு என்பது, சமூக உறவுகள் பிரிவு (CRU), வீடமைப்பு வளர்ச்சிக் கழகம் (HDB), மக்கள் கழகம் (PA) அல்லது சமூக சமரச நிலையத்தில் (CMC) உள்ள அங்கீகரிக்கப்பட்ட அதிகாரிகள் அக்கம்பக்கத்தில் வசிக்கும் குடியிருப்பாளர்களுக்கு வழங்கும் ஒரு சட்ட ஆவணமாகும். இதன்படி, பெயர் குறிப்பிடப்பட்ட நபர்கள் தங்கள் பிரச்சினைகளை இணக்கமான முறையில் விவாதிப்பதற்கு, சமூக சமரச நிலையத்திலோ அதற்கென நியமிக்கப்பட்ட இடத்திலோ நடைபெறும் சமரச அமர்வில் கலந்துகொள்ள வேண்டும்.

## எனக்கு ஏன் சமரச உத்தரவு வழங்கப்பட்டுள்ளது?

உங்களுக்கும் உங்கள் அக்கம்பக்கத்தினருக்கும் இடையிலான பிரச்சினைகளைத் தீர்க்க சமரசம் செய்வது பொருத்தமானது என அங்கீகரிக்கப்பட்ட அமைப்பு ஒன்று மதிப்பிட்டுள்ளதால், உங்களுக்கு சமரச உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. இரு தரப்பினரும் சமூக சமரச நிலையத்திலோ நியமிக்கப்பட்ட இடத்திலோ நடைபெறும் சமரசத்தில் கலந்துகொள்ள வேண்டும்.






## சமரசம் என்றால் என்ன?

சமரசம் என்பது ஒரு இரகசியமான செயல்முறையாகும். இதில் பயிற்சிபெற்றசமரசநிபுணர்,தரப்பினர்தங்கள்பிரச்சனைகளை பற்றி விவாதிக்கவும், பரஸ்பரம் ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வுகளை நோக்கிச் செயல்படவும் உதவுகிறார்.

## சமரசத்தில் யார் ஈடுபடுவார்கள்?

சமரச உத்தரவுகளில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்துத் தரப்பினரும் இந்த சமரசத்தில் ஈடுபடுவார்கள். பயிற்சி பெற்ற CMC சமரச நிபுணர்கள் இதனை வழிநடத்துவார்கள்.

## சமரச நிபுணர்களின் பங்கு



சம்பந்தப்பட்ட தரப்பினர் இடையே எந்தப் பக்கமும் சாராமல், அவர்கள் தங்களின் பிரச்சினைகளை வெளிப்படையாகப் பகிர்ந்து கொள்வதற்கு ஏதுவாக, பாதுகாப்பான மற்றும் நடுநிலையான ஓர் இடத்தை வழங்குவதே சமரச நிபுணர்களின் பங்காகும்.



கூட்டு மற்றும் தனிப்பட்ட அமர்வுகளின்போது பகிரப்படும் தகவல்கள் இரகசியம் காக்கப்படும். உங்கள் ஒப்புதலுடன் மட்டுமே அவை மற்ற தரப்பினருடன் பகிர்ந்துக் கொள்ளப்படும்.

# நான் ஏன் சமரசத்தை முயற்சிக்க வேண்டும்?



பொதுவாக 4 மணி நேரத்திற்கும் குறைவான நேரமே செலவாகும்.



இலவசமானது.



சமரச முறை இரகசியமானது.





இது சட்ட அமைச்சின் சேவைகள் நிலையத்தில் உள்ள சமூக சமரச நிலையத்தில் அல்லது நியமிக்கப்பட்ட இடத்தில் நடத்தப்படும்.




இது ஆங்கிலம், சீனம், மலாய் அல்லது தமிழில் மேற்கொள்ளப்படும்.

# என்னால் கலந்துகொள்ள முடியாவிட்டால் என்ன செய்வது?

குறிப்பிடப்பட்டுள்ள தேதி மற்றும் நேரத்தில் உங்களால் சமரசத்தில் கலந்துகொள்ள முடியாவிட்டால், கூடிய விரைவில் எங்களைத் தொடர்புகொள்ளவும், இது தொடர்பாக நாங்கள் உங்களுக்கு உதவுவோம்.

நியாயமான காரணம் இல்லாமல் சமரச உத்தரவுக்கு இணங்கத் தவறுவது, சமூக சர்ச்சை தீர்வுச் சட்டம் 2015-இன் பிரிவு 13R-இன் கீழ் ஒரு குற்றமாகும். தண்டிக்கப்பட்டால், நீங்கள் $1,500 வரை.



# உங்கள் சமரசப் பயணம்




1

## உங்கள் சமரச உத்தரவைக் கவனமாகப் படியுங்கள்

குறிப்பிடப்பட்டுள்ள தேதி, நேரம், இடம் மற்றும் காலக்கெடுவைக் குறித்துக்கொள்ளுங்கள். உங்களுக்கு ஏதேனும் கேள்விகள் இருந்தால் எங்களைத் தொடர்புகொள்ளுங்கள்.

2




## உங்கள் அமர்விற்குத் தயாராகுதல்

உங்கள் அமர்விற்கு முன்பு, நீங்கள் உரையாட விரும்பும் பிரச்சினைகள் மற்றும் நீங்கள் அடைய விரும்பும் முடிவுகள் குறித்து சிந்தியுங்கள்.

சான்றுகளை முன்வைக்க வேண்டிய அவசியமில்லை. சமரசம் என்பது தரப்பினர்களுக்கு இடையேயான ஓர் உரையாடலே தவிர, அது ஒரு முறையான விசாரணை அல்ல.



## 3

## அமர்வில் கலந்துகொள்ளுதல்

சமரசப் பேச்சுக்கு முன்பாக உள்ள நிர்வாக நடைமுறைகளைப் பூர்த்திசெய்ய, 20நிமிடம் முன்னதாக வரும்போது, உங்கள் அடையாளத்தைச் சரிபார்க்க, அரசாங்கத்தால் வழங்கப்பட்ட அடையாள ஆவணங்களில் ஒன்றை (அடையாளஅட்டை (NRIC), கடப்பிதழ், ஓட்டுநர் உரிமம் முதலானவை) உடன் கொண்டு வாருங்கள்.

சமரசமானது, சட்ட அமைச்சின் சேவைகள் நிலையத்தில் உள்ள சமூக சமரச நிலையத்தில் MinLaw Services Centre (MSC), 45 Maxwell Road, #07-11 The URA Centre (East Wing), Singapore 069118 அல்லது நியமிக்கப்பட்ட ஓர் இடத்தில் நடைபெறும்.



## 4

## உடன்பாட்டை எட்டுதல் அல்லது அடுத்தகட்ட நடவடிக்கைகளைக் கருத்தில் கொள்ளுதல்

இரு தரப்பினரும் ஓர் உடன்பாட்டை எட்டினால், நீங்கள் உடன்பாட்டு ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டு, கையொப்பமிடப்பட்ட ஆவண நகலை 3 வேலை நாட்களுக்குள் பெறுவீர்கள்.

உடன்பாடு எதுவும் எட்டப்படவில்லை என்றால், சமூக சர்ச்சை தீர்வு மன்றத்தில் (CDRT) கோரிக்கைத் தாக்கல் செய்வதை நீங்கள் பரிசீலிக்கலாம்.

# எங்களது தொடர்பு விவரங்கள்

## சமூக சமரச நிலையம் (CMC)

Ministry of Law Services Centre (MSC)
45 Maxwell Road, #07-11 The URA Centre (East Wing)
Singapore 069118

**செயல்பாட்டு நேரம்:** திங்கள் முதல் வெள்ளி வரை:
காலை 8.30 மணி முதல் மாலை 5.00 மணி வரை

தொடர்புக்கு: 1800-2255-529
**இணையவழி வினவல்:** https://go.gov.sg/mdenquiry

**இணையத்தளம்:** https://cmc.mlaw.gov.sg/

வினவல் சமர்ப்பிப்புக்கு ஸ்கேன் செய்க:

https://go.gov.sg/mdenquiry

# சமூக சமரச நிலையத்துக்குச் செல்லும் வழி

**இடம்:**

- மெக்ஸ்வெல் உணவு நிலையத்திற்கு எதிரில்
- நகரச் சீரமைப்பு ஆணைய நிலையம் சிங்கப்பூர் நகரக் காட்சிக்கூடத்திற்கு அருகில்

**அருகிலுள்ள பெருவிரைவு ரயில் நிலையங்கள்:**

- மெக்ஸ்வெல் பெருவிரைவு ரயில் நிலையம் (TE18), 5 நிமிட நடைப்பயணம்
- தஞ்சோங் பகார் பெருவிரைவு ரயில் நிலையம் (EW15), 8 நிமிட நடைப்பயணம



வரைபட வள ஆதாரம்: ஒன்மேப் (OneMap), சிங்கப்பூர் நில ஆணையம் (SLA)

**அருகிலுள்ள பேருந்து நிறுத்தம்:**
மெக்ஸ்வெல் நிலையம் வெளியேறும் வழி 2 (05269), 3 நிமிட நடைப்பயணம்
**பேருந்து சேவைகள்:** 80, 145

**அருகிலுள்ள வாகன நிறுத்துமிடம்:**

- நகரச் சீரமைப்பு ஆணைய நிலையம் கிழக்குப் பிரிவு வாகன நிறுத்துமிடம்
- நகரச் சீரமைப்பு ஆணைய நிலையத்தின் திறந்தவெளி வாகன நிறுத்துமிடம் (மெக்ஸ்வெல் சாலை வழியாக உள்ள நுழைவாயில்)